# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
# விளக்க குறிப்பேடு
# தொழிற் பயிற்சி நிலையங்களில்
# மாணவர் சேர்க்கை - 2022





ஆன்லைன் கலந்தாய்வு மூலம் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து

**பயிற்சி பெறு !**
**திறனை மேம்படுத்து !**
**வேலைவாய்ப்பு பெறு !**
**உலகை இயக்கு !**

Industrial Training Institute

# தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை - 2022


| வரிசை எண் | விளக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பொது தகவல்கள் | 2 |
| 2 | பயிற்சி | 2 |
| 3 | இரட்டைப் பயிற்சி முறை (Dual Training) | 3 |
| 4 | கல்வித்தகுதி | 3 |
| 5 | வயது வரம்பு | 4 |
| 6 | இட ஒதுக்கீடு | 5 |
| 7 | சிறப்பு இனத்தவருக்கான ஒதுக்கீடு | 5 |
| 8 | முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் | 6 |
| 9 | உடல் தகுதி | 6 |
| 10 | ஆன்லைன் கலந்தாய்வு | 6 |
| 11 | விண்ணப்பிக்கும் முறை | 7 |
| 12 | விண்ணப்பக் கட்டணம் | 8 |
| 13 | ஆன்லைன் கலந்தாய்வு சேர்க்கை முறை | 9 |
| 14 | தரவரிசையில் சமநிலை மதிப்பெண் | 11 |
| 15 | சான்றிதழ் சரிபார்ப்பு | 11 |
| 16 | பயிற்சிக் கட்டண விவரம் | 11 |
| 17 | விடுதி வசதி | 12 |
| 18 | மாணவர்கள் பயிற்சி காலத்தில் வழங்கப்படும் சலுகைகள் | 13 |
| 19 | தொழிற்சாலைகளில் நேரடிப்பயிற்சி (Internship Training) | 14 |
| 20 | வேலைவாய்ப்புகள் | 15 |
| 21 | முக்கிய அறிவுரைகள் | 15 |
| 22 | ஆன்லைன் கலந்தாய்வு நடைபெறும் இடங்கள் | 16 |

# தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை - 2022

## தகவல்கள் மற்றும் அறிவுரைகள்

1. பொதுவான தகவல்கள் : General Information

தமிழ் நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை ஆன்லைன் கலந்தாய்வு மூலம் மேற்கொள்ளப்பட உள்ளதையடுத்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் விண்ணப்பதாரர்கள் இவ்விளக்க குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் கவனமுடன் படித்து தெரிந்து கொள்ளவும்.

- தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றிட விருப்பம் உள்ளோர் விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, அதற்கேற்ப ஒதுக்கப்பட்ட தேதிகளில் அரசு விதிகளுக்குட்பட்டு ஆன்லைன் கலந்தாய்வு வாயிலாக சேர்க்கை நடைபெறும்.

2. பயிற்சி : (Training)

- தொழிற்பயிற்சி நிலையங்களில் மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தின் (NCVT) அங்கீகாரத்தின் கீழ் பல்வேறு தொழிற்பிரிவுகளில் ஆறு மாதம், ஓராண்டு மற்றும் ஈராண்டு கால அளவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகள் விவரம், பயிற்சிக்கால அளவு, சேர்க்கைக்கான கல்வித்தகுதி ஆகிய விவரங்கள் ITI details-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் துவங்கும்.
- பயிற்சியின் போது ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் அகில இந்திய தொழிற் தேர்வு நடத்தப்பட்டு அனைத்து ஆண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) வழங்கப்படும்.



- சில அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாநில தொழிற்பயிற்சிக்குழுமத்தின் (SCVT) - கீழ் செயல்படும் தொழிற்பிரிவுகளில் வழங்கப்படும் பயிற்சிக்கு மாநில தொழிற்பயிற்சிக்குழுமத்தின் சான்றிதழ் வழங்கப்படும். மத்திய அரசு சான்றிதழ் (NCVT) தேவைப்படின் SCVT முறையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தன்விருப்ப அடிப்படையில் தனியராக (Private Candidates) அகில இந்திய தொழிற்தேர்வு எழுதி தேர்ச்சி பெறவேண்டும்.

## 3. இரட்டைப்பயிற்சி முறை (Dual Training)

- தமிழகத்தில் சில அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இந்த இரட்டை பயிற்சி முறை நடத்தப்பட்டு வருகிறது.
- இப்பயிற்சி முறையில் கருத்தியல் (Theory) மற்றும் அடிப்படை செய்முறை பயிற்சி (Basic Practical) வகுப்புகள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் செய்முறை பயிற்சி வகுப்புகள் (Practical) தொழிற்பயிற்சி நிலையங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள தொழில் நிறுவனங்களிலும் நடைபெறும்.
- இப்பயிற்சி முறையில் சேரும் மாணவர்களுக்கு நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலத்திற்கு ஊக்கத்தொகை தொழில் நிறுவனங்களால் வழங்கப்படும். இப்பயிற்சி முறையிலும் தேர்வு ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படும்.
- இப்பயிற்சி முறை வழங்கப்படும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பிரிவுகள் விவரங்கள் view ITI details-ல் தரப்பட்டுள்ளது.

## 4. கல்வித்தகுதி: (Education Qualification)

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கான கல்வித்தகுதியாக எட்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (தொழிற்பிரிவுகள் விபரம் View ITI details–ல் தரப்பட்டுள்ளது).

(i.) 8-ம் வகுப்பு தேர்ச்சி – தொழிற்பயிற்சி நிலையங்களில் சில தொழிற்பிரிவுகளுக்கு மட்டும்

8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் 8-ஆம் வகுப்பு வரை பள்ளிகளில் முறையாகப் பயின்று (Regular) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியென நிர்ணயம் செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில் சேர்க்கைக்கு 8-ம் வகுப்பு மதிப்பெண்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். எனவே 8-ம் வகுப்பு தொழிற்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 8-ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலை கண்டிப்பாக சம்மந்தப்பட்ட பள்ளியிலிருந்து பெற்று Upload செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் 8-ஆம் வகுப்பு மதிப்பெண்களைப் பதிவு செய்ய வேண்டும்.





(ii.) 10 ம் வகுப்பு தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில் சேர்ந்திட எட்டாம் வகுப்பு வரை பள்ளி-களில் முறையாகப் பயின்று (Regular) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 9-ம் வகுப்பு தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றிருப்பினும் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் முறையாக பயின்று தேர்ச்சி பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர இயலாது.

## 5. வயது வரம்பு ( Age Limit )

| வ.எண் | பொருள் | வயது: |
|---|---|---|
| 1 | பகிரங்கப்போட்டி (OC) | 14 முதல் 40 வயது வரை |
| 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பழங்குடியினர் (BC/MBC/DNT) | 14 முதல் 40 வயது வரை |
| 3 | ஆதி திராவிடர் / பழங்குடியினர்(SC/ST) | 14 முதல் 40 வயது வரை |
| 4 | முன்னாள் இராணுவத்தினர் | 14 முதல் 45 வயது வரை |
| 5 | மாற்றுத் திறனாளிகள் | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு இல்லை |
| 6 | போரில் இறந்த இராணுவ வீரரின் மனைவி | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு இல்லை |
| 7 | விதவை / கணவரால் கைவிடப்பட்டோர் | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு இல்லை |
| 8 | மகளிர் | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு இல்லை |



6. இட ஒதுக்கீடு : (Reservation)

| வ.எண் | பொருள் | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் (SC) | 15.12 சதவீதம் |
| 2 | ஆதி திராவிடர் (அருந்ததியர்) (SCA) | 2.88 சதவீதம் |
| 3 | பழங்குடியினர் (ST) | 1 சதவீதம் |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பழங்குடியினர் (MBC/DNT) | 20 சதவீதம் |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | 26.5 சதவீதம் |
| 6 | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BCM) | 3.5 சதவீதம் |
| 7 | பகிரங்க போட்டி (OC) | 31 சதவீதம் |

7. முன்னுரிமை இனத்தவருக்கான ஒதுக்கீடு : (Reservation for Priority criteria)

| | |
|---|---|
| முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் (ஒரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு) | 5 இருக்கைகள் |
| மாற்றுத் திறனாளிகள் ** (NCVT விதிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட உடற்குறைபாட்டின் வகைகளின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்கள் தொழிற்பிரிவுகளை தேர்வு செய்திட அனுமதிக்கப்படுவர்) | 5 சதவீதம் |
| மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் முதன்மையாக வரும் பள்ளி மாணவ, மாணவியருக்கு | 1 சதவீதம் |
| தாய் தந்தை இழந்த ஆதரவற்ற மாணவருக்கு | 2 சதவீதம் |
| மகளிர் | 30 சதவீதம் |

காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோருக்கு மட்டும் கிண்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் கோணம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துநர் (Fitter) தொழிற்பிரிவில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

8. முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்: (Heirs of Ex Service person)

முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் முன்னாள் படை வீரர் நல இயக்கக உதவி இயக்குநரால் வழங்கப்பட்ட சான்றிதழை Upload செய்ய வேண்டும். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் இவர்களுக்கு 5 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாணவர் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளுக்குட்பட்டு தொழிற்பிரிவு ஒதுக்கப்படும்.

9. உடல் தகுதி: (Physical Fitness)

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மருத்துவ சான்றிதழின் பேரில் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். மருத்துவ சான்றிதழின்படி உடல் தகுதியற்றோர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மாற்றுத் திறனாளிகள் உடற்குறைபாட்டின் தன்மையைப் பொறுத்து மருத்துவரின் பரிந்துரையின் பேரில் உரிய தொழிற் பிரிவுகளில் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர். தொழிற்பயிற்சி நிலையத்தில் மருத்துவர் முன்பு ஆஜராகி, மருத்துவர் அளிக்கும் சான்றிதழின்படி மட்டுமே இவர்களுக்கு தொழிற்பிரிவுகள் ஒதுக்கப்படும். மாற்றுத் திறனாளிகள் தங்களின் உடற்குறைபாட்டின் தன்மையை விளக்கும் வகையில் 125 x 75 மி.மீ. நிழற்படத்தையும், முடவியல் (Ortho) மருத்துவரின் சான்றிதழையும் பெற்று Upload செய்ய வேண்டும்.



10. ஆன்லைன் கலந்தாய்வு: (Online Counselling)

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் இடங்கள், தகுதியான அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் 50% அரசு ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவற்றிற்கு ஆன்லைன் கலந்தாய்வு மேற்கொள்ளப்படும்.

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை பொறுத்த வரையில் கலந்தாய்வுக்கு விருப்பம் தெரிவித்துள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில், துறை சார்பில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகளின்படி தகுதியான தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மட்டுமே கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படும்.

இணையதளத்தில் தரப்பட்டுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் பட்டியல் தகவலுக்காக மட்டுமே தரப்பட்டுள்ளது. இதில் தரப்பட்டுள்ள தகவல்களை வைத்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் கலந்தாய்வில் பங்கேற்க உரிமை கோர இயலாது.

சேர்க்கை தொடர்பான முக்கிய நிகழ்வுகள் **www.skilltraining.tn.gov.in** என்ற இணைய தளத்தில் வெளியிடப்படும்.

11. விண்ணப்பிக்கும் முறை: (How to Apply)

அ. ஆன்லைன் கலந்தாய்வு சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆ. இணையதளத்தில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து சரிபார்த்த பின் சமர்ப்பித்து ஒப்புகை பெறலாம். அதனை பிரிண்ட் செய்து கொள்ளலாம்.

இ. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது தங்களது **சரியான அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியினை** குறிப்பிட வேண்டும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் போது தங்களால் உள்ளீடு செய்யப்படும் அலைபேசி, மின்னஞ்சல் முகவரி, ஆதார் எண் மற்றும் கடவுச்சொல் ஆகியன தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை, சேர்க்கை ஆணை ஆகியவற்றை பதிவிறக்கம் செய்ய தேவைப்படும் என்பதால் தங்கள் சொந்த அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மட்டுமே உபயோகிக்குமாறும் கடவுச்சொல்லை நினைவில் வைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஈ. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் 25 விருப்பமான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை தேர்வு செய்யலாம். விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்பட்டியல் வெளியிடப்படும். தரவரிசைப்பட்டியலின் படி மதிப்பெண் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் விண்ணப்பதாரர்களால் பதிவு செய்யப்பட்ட விருப்பத்திற்கு ஏற்றவாறு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவு ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்படும்.




ஈ. இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதில் ஏதேனும் ஐயங்கள் இருப்பின் அருகில் உள்ள கலந்தாய்வுக்கான உதவி மையத்தை அணுகலாம்.

12. விண்ணப்பக் கட்டணம்: (Application Fee)

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணமாக (Application fee) ரூ.50/-(ரூபாய் ஐம்பது மட்டும்) — ஐ பற்று அட்டை (Debit card) / கடன் அட்டை (credit card) / இணைய வழி வங்கிக் கணக்கு வாயிலாகவும் (internet banking) மற்றும் யு பி ஐ (UPI) யை தேர்ந்தெடுத்து Google pay/Paytm வாயிலாகவும் செலுத்தலாம்.

## 13. ஆன்லைன் கலந்தாய்வு சேர்க்கை முறை: (Online Counselling and Admission Process)

1. விண்ணப்பதாரர்களின் 8-ம் மற்றும் 10-ம் வகுப்பு தேர்வுகளின் மதிப்பெண் அடிப்படையில் தனித்தனியாக தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு வெளியிடப்படும்.

2. ஆன்லைன் கலந்தாய்வின் போது விண்ணப்பதாரர்களின் தரவரிசை, இனசுழற்சிமுறை மற்றும் விண்ணப்பத்தில் தேர்வு செய்த முன்னுரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில் கணினி வழிமுறைகளின்படி தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற் பிரிவு உறுதி செய்யப்பட்டு தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை (Provisional allotment order) வழங்கப்படும்.





3. விண்ணப்பதாரர்கள் தங்களது தற்காலிக ஒதுக்கீட்டு ஆணையினை (Provisional allotment order) இதே இணையதளத்தில் சென்று தங்களது log-in விவரங்களை உள்ளீடு செய்து தரவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் அதற்குரிய சேர்க்கை கட்டணத்தை தங்களுக்கு சேர்க்கை ஒதுக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடியாக சென்று செலுத்தலாம். அதன்பின் தங்களது அசல் சான்றிதழ்களை தொழிற்பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் குறித்த காலவரையறைக்குள் சேர்க்கை கட்டணத்தை செலுத்தி சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறினால் தங்களது ஒதுக்கீட்டு ஆணை இரத்து செய்யப்பட்டு அடுத்த கட்ட கலந்தாய்வில் அவ்விடமாக காலியிடமாக அறிவிக்கப்படும்.

14. தரவரிசையில் சமநிலை மதிப்பெண்:
(Equal Score in the Ranking)

தர வரிசை விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடி-ப்படையில் தயார் செய்யப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தர வரிசையில் சமநிலை மதிப்பெண் பெற்றிருந்தால் கீழ்காணுமாறு தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

1. கணித மதிப்பெண் கூடுதலாக பெற்றவர் முதலிடம் பெறுவார்.
2. கணித பாடத்தில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் அறிவியல் பாடத்தில் மதிப்பெண் கூடுதலாக பெற்றவர் முதலிடம் பெறுவார்.
3. கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் பிறந்த தேதியை கொண்டு அதிக வயதுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



15. சான்றிதழ் சரிபார்ப்பு:

(Certificate Verification)

மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் 8–ம்/10–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு அனுப்பி சரிபார்க்கப்படும்.

போலிச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கும் நேர்வில், சம்பந்தப்பட்ட மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படுவதோடு, சம்பந்தப்பட்ட மாணவரின் மீது உரிய குற்றவியல் (Criminal) நடவடிக்கை எடுக்கப்படும்.

16. பயிற்சிக் கட்டண விவரம்: (Fees Structure)

கீழ்கண்ட கட்டணங்களை மாணவர்கள் பயிற்சியில் சேரும்போது செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சிக்கட்டணம் (Tution Fee) | ஏதும் இல்லை |
| 2 | காப்புத் தொகை (Caution Deposit) | ரூ.100 (பயிற்சியின் முடிவில் திரும்ப வழங்கப்படும்) |
| 3 | விளையாட்டுப்போட்டிகள் தொடர்பான கட்டணம் (Sports Fee) | ரூ.10 (ஆண்டு ஒன்றிற்கு) |
| 4 | பதிவுக் கட்டணம் (Registration fee) | ரூ.25 |
| 5 | 10/8-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் சரி பார்க்கும் கட்டணம் (Certificate verification fee) | ரூ.50 (தலா ஒரு சான்றிதழுக்கு) |



விடுதி வசதி:
(Hostel Facilities)

கீழ்காணும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மட்டுமே விடுதி வசதி உள்ளது. விடுதியில் உள்ள இட வசதியை பொறுத்து மாணவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

| வ.எண். | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | வ.எண். | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | வ.எண். | அரசு தொழிற்பயிற்சி நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | வடசென்னை | 19 | வேலூர் | 37 | கொல்லிமலை |
| 2 | அம்பத்தூர் | 20 | செங்கல்பட்டு | 38 | ஆலத்தூர் |
| 3 | திருவண்ணாமலை | 21 | சேலம் | 39 | சாத்தூர் |
| 4 | மேட்டூர் அணை | 22 | தாராபுரம் | 40 | கடையநல்லூர் |
| 5 | குன்னூர் | 23 | ஓசூர் | | |
| 6 | ஈரோடு | 24 | கடலூர் | | |
| 7 | நாகப்பட்டினம் | 25 | திருச்சி | | |
| 8 | அரியலூர் | 26 | மதுரை | | |
| 9 | பரமக்குடி | 27 | திண்டுக்கல் | | |
| 10 | திருநெல்வேலி | 28 | திருச்செந்தூர் | | |
| 11 | நாகர்கோவில் | 29 | விருதுநகர் | | |
| 12 | போடிநாயக்கனூர் | 30 | வேப்பலோடை | | |
| 13 | இராதாபுரம் | 31 | திருவையாறு | | |
| 14 | அருப்புக்கோட்டை | 32 | சின்னசேலம் | | |
| 15 | திண்டிவனம் | 33 | மணிகண்டம் | | |
| 16 | காட்டுமன்னார்கோயில் | 34 | கருமந்துறை | | |
| 17 | ஜமுனாமருதூர் | 35 | ஆனைகட்டி | | |
| 18 | வடகரை | 36 | கூடலூர் | | |




| | | |
|---|---|---|
| 1 | விடுதி சேர்க்கைக் கட்டணம் | ரூ.01 |
| 2 | விடுதி காப்புத் தொகை | ரூ.25 |
| 3 | விடுதி வாடகை கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.200 |
| 4 | விடுதி பராமரிப்பு கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.10 |

இது தவிர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் உணவுடன் கூடிய விடுதி வசதிகள் பல இடங்களில் உள்ளன. இதில் குறிப்பிட்ட இடங்கள் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விடுதியில் உள்ள இடவசதியை பொறுத்து இவற்றில் தங்குவதற்கு பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

## 18. மாணவர்களுக்கு பயிற்சி காலத்தில் வழங்கப்படும் சலுகைகள்: (Amenities for the Students during Training time)

(அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தனியார்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மட்டும்)

அ) அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்கண்ட சலுகைகளை அரசு வழங்குகிறது.

| | |
|---|---|
| 1 | உதவித்தொகை ரூ.750/- மாதந்தோறும் (வருகை நாட்களுக்கு ஏற்ப) |
| 2 | கட்டணமில்லா பேருந்து சலுகை |
| 3 | விலையில்லா மிதிவண்டி |

| | |
|---|---|
| 4 | விலையில்லா மடிக்கணினி |
| 5 | விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள் |
| 6 | விலையில்லா சீருடை - ஒரு செட் |
| 7 | விலையில்லா காலணி - ஒரு செட் |
| 8. | பயிற்சிக்கு தேவையான நுகர் பொருட்கள் |

ஆ) தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவர்களுக்கான பயிற்சி கட்டணத்தை அத்தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கீழ்காணுமாறு அரசே செலுத்துகிறது.

1. நகரப்பகுதிகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.12,000/-வீதம் பயிற்சிக்கட்டணம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும்.
2. ஊரகப்பகுதிகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/- பயிற்சிக்கட்டணம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும்.

## 19. தொழிற்சாலைகளில் நேரடிப்பயிற்சி (Internship Training)




அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் தொழிற்சாலைகளில் அவர்களது பயிற்சி தொடர்பான நேரடிப்பயிற்சி (internship Training) இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்பயிற்சியில் Ashok Leyland, L&T constructions, Hyundai Motors, போன்ற முன்னணி தொழிற்நிறுவனங்களில் நேரடிப்பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சியைத் தவிர இவ்வாறு தொழில் நிறுவனங்களில் நேரடிப்பயிற்சி வழங்கப்படுவதால் மாணவர்கள் எளிதில் தங்களை வேலைவாய்ப்பிற்கு தயார்படுத்திக்கொள்கின்றனர்.

20. வேலைவாய்ப்புகள்: (Job Opportunities)

ஒவ்வொரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் அங்கு பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைகளிலும், அரசுத்துறை நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சி ஏற்பாடு செய்வதற்கென பணியமர்த்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பணியமர்த்தும் அலுவலர்களால் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தொழிற்பழகுநர் பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரப்பட்டு வருகிறது.

21. முக்கிய அறிவுரைகள்: (Important Information)

- தமிழ்நாடு மாணவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு பொருந்தும்.
- பழங்குடி இன மாணவர்கள் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து (Revenue Divisional Officer) சாதிச்சான்றிதழ் பெற வேண்டும்.
- பிற மாநிலங்களில் X-std / பள்ளிப்படிப்பு முடித்தவர்கள் Migration மற்றும் Equivalent சான்றிதழ்கள் சமர்ப்பித்து சேர்க்கை கோரலாம்.

**விண்ணப்பம் பதிவு செய்யும்போது கீழ்காணும் ஆவணங்களை வைத்துக்கொள்ளவும்.**

E-mail id (மின்னஞ்சல் முகவரி).

Mobile No. (அலைபேசி எண்).

Date of Birth (பிறந்த தேதி).

Community / Caste details. (வகுப்பு / சாதி விவரங்கள் (ST/SCA/SC/MBC/DNT/BCM/BC).

Aadhar No. (ஆதார் எண்).

Priority Reservation (முன்னுரிமை இட ஒதுக்கீடு).

a. Ex-servicemen / Ex-servicemen ward (முன்னாள் ராணுவத்தினர் / முன்னாள் ராணுவ வீரரின் மகன் / மகள்).

b. Differently abled Person (மாற்றுத்திறனாளிகள்) .

c. State level sports winner (மாநில அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள்.

d. Orphan / ஆதரவற்றோர்.

Details for paying application fee through online payment gateway. (இணையவழியாக விண்ணப்பக்கட்டணம் செலுத்துவதற்கு தேவையான விவரங்கள் (Debit cart / credit Card / Gpay / Net banking).

2021-ம் ஆண்டில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும் 9ம் வகுப்பு மதிப்பெண்களை பதிவு செய்ய, மற்றவர்கள் 10-ம் வகுப்பு மதிப்பெண்களை பதிவிடவும்.

கீழ்க்காணும் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யும் பொருட்டு scan செய்து JPEG வடிவில் வைத்துக்கொள்ளவும்.

a. 8th / 10th Mark sheet (எட்டாம் வகுப்பு / பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்.)

b. Transfer Certificate /மாற்றுச்சான்றிதழ்.

c. Community Certificate / சாதிச்சான்றிதழ்.

d. Priority Reservation Certificate / முன்னுரிமை இடஒதுக்கீட்டிற்கான ஆவணம்.

e. Passport size photo (50 kb to 100 kb) & signature (10 kb to 20 kb).


ELECTRICAL MACHINE TRAINER

# தொழில் நிறுவனங்களின் சமூக பொறுப்பின் கீழ் தொழிற்பயிற்சி நிலையங்களில் பங்களிப்பு

ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள ஹூண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கம்மியர் மோட்டார் வண்டி (MMV) தொழிற்பிரிவு பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.55.00 இலட்சம் செலவில் பணிமனை கட்டி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.11.00 இலட்சம் மதிப்பில் இத்தொழிற்பிரிவிற்கு தேவையான இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயிற்சியாளர்களின் பயன்பட்டிற்காக வழங்கியுள்ளது.

மாருதி சுசூகி லிட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள மெக்கானிக் ஆட்டோபாடி பெயிண்டிங் தொழிற்பிரிவுகளுக்கு தேவையான இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்கள் ஆகியவை ரூ.48.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது.

ஹோண்டா மோட்டார்ஸ் ரூ ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து செங்கல்பட்டு, மதுரை, சிவகங்கை மற்றும் தர்மபுரி ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள கம்மியர் மோட்டார் வண்டி (MMV) தொழிற்பிரிவு பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இருசக்கர வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்பட்டு பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்கு உள்ளது.

இராமநாதபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் சமூக பொறுப்பு நிதியிலிருந்து கட்டித்தரப்பட்டுள்ளது.

செம்போடை மற்றும் பெரும்பாக்கத்தில் முறையே பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிட் நிறுவனங்களுடன் ரூ.23 கோடி மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளது.



Titan e-Leap - Naandi Foundation நிறுவனங்கள் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் பயிற்றுநர்களுக்கும் நடத்தை மற்றும் தொடர்புகொள்ளும் திறன் குறித்த பயிற்சி வழங்குகிறது

சரியான எதிர்கால திறன் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக Accenture மற்றும் Cisco வுடன் இணைந்து, Quest Alliance ஐ.டி.ஐ யை சேர்ந்த 17,000 இளைஞர்களை வேலைவாய்பபு திறன் மூலம் மேம்படுத்துகிறது. எந்த சூழ்நிலையிலும் கைபேசியின் மூலம் சுய கற்றலை செயல்படுத்த Quest Alliance யின் 250 மணி நேர பாடத்திட்டம் உகந்ததாகும். இந்த கூட்டாண்மையானது, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு ஐ.டி.ஐ யில் உள்ள மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களின் 21 ஆம் நூற்றாண்டின் திறன், டிஜிட்டல் திறன் மற்றும் மேம்பாடு திறன்களை வளர்த்து ஐ.டி.ஐ யின் சூழல் மற்றும் அமைப்பை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அசோக் லேலண்ட் நிறுவனம் அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆட்டோமொபைல் திறன் மேம்பாட்டு மையம் அமைத்து கொடுத்துள்ளது.

அரசு தொழிற்பயிற்சி நிலையம், கோயம்புத்தூர் மற்றும் கடலூரில் ரூ.40.00 இலட்சம் மதிப்பில் சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சார்பில் மிண்ணனு பழுது பார்க்கும் பணிமனை உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழகம் மற்றும் Siemens Centre of Excellence @ MIT நிறுவனமும் இணைந்து மேம்பட்ட தொழில்நுட்பங்களில் திறன் மேம்பாடு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் முன்னாள் மாணவரின் நிறுவனமான GRIDLINE SURVEYS AND GEOSPATIAL PVT. LTD. மூலம் ட்ரோன் பயிற்சி வழங்கப்பட்டது.



அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு கீழ்காணும் உலக அளவிலான தொழில் நிறுவனங்களில் Internship பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு
கீழ்காணும் உலக அளவிலான தொழில் நிறுவனங்களில் Internship
பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு கீழ்காணும் உலக அளவிலான தொழில் நிறுவனங்களில் Internship பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

# தொழிற்பயிற்சி சேர்க்கைக்கான தகவல்களும் குறிப்புகளும்
# www.skilltraining.tn.gov.in



இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கீழ்காணும் முகவரியிலும் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| அலுவலக முகவரி | இயக்குநர்<br>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை<br>ஆலந்தூர் சாலை,<br>கிண்டி தொழிற்பேட்டை,<br>சென்னை - 600 032. |
| அலைபேசி மற்றும் Whatsapp எண் | 9499055612 |
| மின்னஞ்சல் | onlineitiadmission2022@gmail.com |